செ.வெ.எண்: 86 நாள்: 28.09.2026

**புதுக்கோட்டை மாவட்டம்**

**சிறிய அளவிலான நாட்டுக் கோழி பண்ணை அமைக்கும் திட்டம்**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

2026-27 ஆம் ஆண்டிற்கு நாட்டுக் கோழிகளை வளர்ப்பதில் திறன் கொண்ட கிராமப்புற பயனாளிகளுக்கு சிறிய அளவிலான (250 கோழிகள்/அலகு) 50% மானியத்துடன் நாட்டுக்கோழி பண்ணை அலகுகள் நிறுவிட அறிவிப்பு தமிழக அரசால் வெளியிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மொத்த செலவில் மாநில அரசால் 50% மானியம் வழங்கப்படும் எனவும், பயனாளிகள் பங்களிப்பாக மீதமுள்ள 50% வங்கி மூலமாகவோ அல்லது தனது ஆதாரங்கள் மூலமாகவோ அளிக்கவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒரு பயனாளிக்கு 250 எண்ணிக்கையிலான 4 வார வயதுடைய நாட்டுக் கோழி குஞ்சுகள் மாவட்ட கால்நடை பண்ணையிலிருந்து இலவசமாக வழங்கப்படும். இத்திட்டத்தின் மூலம் கோழி கொட்டகை அமைக்க 625 சதுர அடி நிலம் சொந்தமாக வைத்திருக்க வேண்டும். அக்கிராமத்தில் நிரந்தமாக வசிப்பவராக இருக்க வேண்டும். இந்தப்பகுதி மனித குடியிருப்பு மற்றும் நீர்நிலைகளிலிருந்து விலகி இருக்க வேண்டும்.

பயனாளிகளில் 30% ஆதிதிராவிடர்கள்/ பழங்குடியினராக இருக்கவேண்டும். மேலும், விதவைகள், ஆதவற்றோர்கள், திருநங்கைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு முன்னுரிமை வழங்கவேண்டும். நாட்டுக்கோழி வளர்ப்பு பண்ணைகளை நிறுவுவதற்கு தேவையான கோழி கொட்டகை கட்டுமானச் செலவு, உபகரணங்கள் வாங்கும் செலவு (தீவனத்தட்டு மற்றும் தண்ணீர் வைக்கும் தட்டு), 4 மாதங்களுக்கு தேவையான தீவனச் செலவு (கோழி வளரும்வரை) ஆகிய செயல்முறைகள் பயனாளியால் செய்யப்படவேண்டும். இத்திட்ட முதலீடு ரூ.2,93,750/-க்கு வங்கி கடன் பெற தகுதி உள்ளவர்கள் அல்லது சொந்தமாக முதலீடு செய்ய தகுதி உள்ளவர்களாக இருக்க வேண்டும். இதில், 50% மானியமாக ரூ1,46,875/-மாநில அரசால் வழங்கப்படும். மேலும், பயனாளிகள் நாட்டுக்கோழி வளர்ப்பின்கீழ் கடந்த 3 ஆண்டுகளில் பயனடைந்திருக்க கூடாது.

எனவே, இத்திட்டத்தில் பயன்பெற விரும்புவோர் ஆதார் அட்டை நகல், பண்ணை அமையவிருக்கும் இடத்திற்கான சிட்டா / அடங்கல்நகல் / ஆதார ஆவணங்களான (வங்கி இருப்பு விவரம்) மற்றும் 3 வருடத்திற்கு பண்ணையை பராமரிப்பதற்கான உறுதிமொழி, ஆகியவற்றுடன் ஒரு வார காலத்திற்குள் அருகிலுள்ள கால்நடை மருந்தகங்களை அணுகி விண்ணப்பிக்கலாம். மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**

புதுக்கோட்டை மாவட்ட செய்திகளை உடனுக்குடன் தெரிந்துக்கொள்ள:

Pro Pudukkottai PRO PDKT @PRO_Pudukkottai Pro.Pudukkottai